கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை: திரு.எஸ். நாகராஜன், இ.ஆ.ப.,

எண். அ1/11146/2013 நாள்: 30.12.2013

பொருள்: மாற்றுத்திறனாளிகள் நலன் - உச்சநீதிமன்ற உத்தரவு - மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு பணியிடங்களில் 3 விழுக்காடு இட ஒதுக்கீடு முழுமையாக வழங்குவதை உறுதிபடுத்துதல் - மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் ஆய்வுக்குழு ஏற்படுத்துதல் - செயல்முறைகள் - தொடர்பாக.

படிக்கப்பட்டவை:
1. அரசாணை நிலை எண்.5,மாற்றுத்திறனாளிகள் நலத்துறை நாள்:29.1.2013
2. உச்சநீதிமன்ற உத்தரவு நாள்: 08.10.2013.
3. முதன்மைச் செயலாளர்/ மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை-78 அவர்களின் கடிதம் எண்.2033/மா.தி.ந.3.1/2013 நாள்: 23.10.2013.

******

ஆணை:-

பார்வை 1-ல் காணும் அரசாணையில் "ஏ", "பி", "சி" மற்றும் "டி" பிரிவு பணியிடங்களில், அரசு சார்பு நிறுவனங்கள், வாரியங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில், தேர்வு செய்யப்படும் மொத்த பணியிடங்களில், மாற்றுத்திறனாளிகளுக்கு 3 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் எனவும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலச்சட்ட விதிகள் 2002 ஏற்படுத்தப்பட்ட பிறகு அரசு, அரசு சார்பு நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களில் 2002 முதல் வழங்கப்பட்ட மொத்த பணியிடங்களில், மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கவேண்டிய பின்னடைவு பணியிடங்கள் கண்டறிந்து நிரப்ப வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மாவட்ட அளவில் அரசு உயர் அலுவலர்களை கொண்டு ஒரு குழு அமைத்து ஆறுமாதத்திற்கு ஒருமுறை நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாவட்ட அளவில் கீழ்க்கண்டவாறு ஒரு "கண்காணிப்புக்குழு" ஏற்படுத்தி ஆணைகள் இடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித்தலைவர்,<br>கன்னியாகுமரி மாவட்டம்.<br>(இ) நாகர்கோவில். | தலைவர் |
| 2. | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,<br>கன்னியாகுமரி மாவட்டம்.<br>நாகர்கோவில். | உறுப்பினர் செயலர் |
| 3. | மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்,<br>கன்னியாகுமரி மாவட்டம் (இ) நாகர்கோவில். | உறுப்பினர் |
| 4. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது),<br>கன்னியாகுமரி மாவட்டம் (இ) நாகர்கோவில். | உறுப்பினர் |

3. இக்குழுவானது ஆறுமாதத்திற்கு ஒருமுறை அரசு அலுவலகங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களில் முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும்.

4. இக்குழுவால் மேற்கொள்ளப்படும் ஆய்வு தொடர்பான அறிக்கையை முதன்மை செயலாளர் / மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு தவறாது அனுப்பிவைக்க மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், நாகர்கோவில் அறிவுறுத்தப்படுகிறார்.

30/12/13

மாவட்ட ஆட்சித்தலைவர்,
நாகர்கோவில்.

பெறுநர்

சம்பந்தப்பட்ட நபர்கள்.

**நகல்:**

முதன்மைச் செயலாளர் / மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,
கே.கே. நகர்,
சென்னை-600 078.